# Class-10

# Tamil (BT)

GENERAL EDUCATION DEPARTMENT
SAMAGRA SHIKSHA, KERALA

# சமக்ரா சிக்ஷா - கேரளா

# வினா வங்கி

**வகுப்பு :10** **தமிழ் இரண்டாம் தாள் (BT)**

## *ஒரு மதிப்பெண்களுக்கான வினாக்கள்*

1. பரத நாட்டியம் :சிவன்

   மோகினியாட்டம் : __________

   அ. திருமால் ஆ. முருகன் இ. விநாயகர் ஈ. பிரம்மா

   **விடை: அ. திருமால்**

2. மோகினியாட்டத்துடன் தொடர்புடைய அசுரன்

   அ.நரகாசுரன் ஆ.இரணியன் இ.பத்மாசூரன் ஈ.இராவணன்

   **விடை: இ.பத்மாசூரன்**

3. மோகினியாட்டம் தமிழ்நாட்டின் பரதநாட்டியத்தையும் கேரளத்தின் ________ யையும் தழுவி உருவானது.

   அ. ஓட்டன் துள்ளல் ஆ. சாக்கியார் கூத்து இ. கதகளி ஈ. ஒப்பனை

**விடை: இ. கதகளி**

4. நாம் பார்க்கும் இன்றைய மோகினியாட்டத்திற்கு வடிவம் கொடுத்தவர்.

   அ. சுவாதி திருநாள் ஆ. சித்திரை திருநாள்

   இ. பழசிராஜா ஈ.மார்த்தாண்டவர்மா

   **விடை: சுவாதி திருநாள்**

5. மோகினியாட்டத்தைக் கேரளத்தின் தனிச்சிறப்பான கலையாக அறிமுகபபடுத்த முயன்றவர்.

   அ. கல்யாணிகுட்டியம்மாள் ஆ. கார்த்திகா பார்த்தீபன்

   இ. லட்சுமி வாரியார் ஈ. ஷோபனா

   **விடை : அ.கல்யாணிக்குட்டியம்மாள்**

6. கேரள கலா மண்டலம் உருவாக்கியவர்

அ. மகாகவி வள்ளத்தோள் ஆ. உள்ளூர் பரமேசுவரர் ஐயர்

இ. குஞ்ஞுன் நம்பியார் ஈ.குமாரனாசன்

**விடை: அ. மகாகவி வள்ளத்தோள்**

7. ஸ்தபதி சிறுகதையின் ஆசிரியர்

அ. கவிதாசன் ஆ. சோ.தர்மன்

இ. இறையன்பு ஈ.பொன்னீலன்

**விடை: இ. இறையன்பு**

8. கேரளத்தில் கொண்டாடும் தேசிய விழா

அ. ஓணம் ஆ. பொங்கல் இ. தசரா ஈ. தீபாவளி

**விடை அ. ஓணம்**

9. சர்வதேச யோகா தினம்

அ. ஜூன்-22 ஆ. ஜூன்-23 இ. ஜூன்-21 ஈ. ஜூன்-24

**விடை - இ. ஜூன்-21**

10. யோகா சூத்திரம் என்னும் நூலை இயற்றியவர்

அ. வீரமாமுனிவர் ஆ. பதஞ்சலி முனிவர்

இ.திருமூலர் ஈ.அருணகிரிநாதர்

**விடை - ஆ. பதஞ்சலி முனிவர்**

11. யோகா என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு ...................... என்று பொருள்

அ. சேர்க்கை ஆ. ஒன்றுபடுதல்

இ. தியானம் ஈ. கவனம்

**விடை - அ. சேர்க்கை**

## இரண்டு மதிப்பெண்களுக்கான வினாக்கள்

12. கீழ்க்காணும் கூற்றுகளுள் மோகினியாட்டத்துடன் தொடர்புடையவற்றைத் தேர்வு செய்து எழுதுங்கள்

அ. மோகினியாட்டத்தின் பாடல்கள் விஷ்ணு அல்லது கிருஷ்ணன் மீது பாடப்பட்டவை.

ஆ. மோகினியாட்டம் ஆண்கள் பெண்கள் இருபாலரும் ஆடுவர்

இ. மோகினியாட்டத்தில் பலநிற ஆடை அலங்கார ஆபரணங்களை பயன்படுத்துவர்.

ஈ. மோகினியாட்டத்தில் தலையை வாரி இடது பக்கமாக கொண்டை போட்டு அதைச்சுற்றி மல்லிகைப் பூ சூட்டுவார்கள்.

விடை: அ. மோகினியாட்டத்தின் பாடல்கள் விஷ்ணு அல்லது கிருஷ்ணன் மீது பாடப்பட்டவை.

ஈ. மோகினியாட்டத்தில் தலையை வாரி இடது பக்கமாக கொண்டை போட்டு அதைச்சுற்றி மல்லிகைப் பூ சூட்டுவார்கள்.

13. மோகினியாட்டக்கலையில் பயன்படுத்தும் இசைக் கருவியை பட்டியலிடுங்கள்.

**விடை:** சிறிய குழித்தளம்

சுத்தமத்தளம்

வீணை

புல்லாங்குழல்

14. மோகினியாட்டக்கலைக்கு ஸ்ரீசுவாதி திருநாள் ஆற்றிய தொண்டுகள் குறித்து எழுதுங்கள்.

**விடை:**

- மோகினியாட்டக் கலைஞர்களை ஆதரித்தார்
- சுவாதி திருநாள் கீர்த்தனைகள் உருவாக்கி மோகினியாட்டக்கலைக்குத் தேவையான பாடல்களை அருளியிள்ளார்.

15. நுண்கலைகள் குறிப்பு எழுதுங்கள்.

- கட்டிடம்,சிற்பம்,ஓவியம்,இசை,காவியம் இவை நுண்கலைகள்.
- கண்ணால் கண்டும்,காதால்கேட்டும் மனதால் உணர்பவை இவை.
- கண்ணால் கண்டு இன்புறத்தக்கது கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை.
- காதால் கேட்டு மகிழ்வது இசை, மனதால் உணர்வது காவியம் இவையாவும் நடமானவை.

16. இணைத்து எழுதுங்கள்

அ.ஜம்பம் - கருணை

ஆ.ஊர் ஜிதம் - படைப்பு

இ.தீட்சண்யம் - பெருமை

ஈ.சிருஷ்டி - உறுதி

உ.சிரத்தை -

**விடை:**

அ.ஜம்பம் - பெருமை

ஆ.ஊர் ஜிதம் - உறுதி

இ.தீட்சண்யம் - கருணை

ஈ.சிருஷ்டி - படைப்பு

17. கானாயி குஞ்ஞிராமன் அவர் வாழ்க்கையுடன் பொருத்தமுடைய தொடர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

1. அப்பா ஓவியம் வரைவதைப் பாராட்டினார்
2. குழைத்த களிமண்ணுக்கு உயிரோட்டம் கொடுத்தவர்
3. சென்னை கல்லூரியில் அப்பா படிக்க வைத்தார்.
4. இவர் உருவாக்கின சிலைகள் பாலக்காடு, மலம்புழாவிலும், திருவனந்தபுரம், சங்குமுகம் என்ற இடத்திலும் உள்ளன.

விடை

2. குழைத்த களிமண்ணுக்கு உயிரோட்டம் கொடுத்தவர்

4. இவர் உருவாக்கின சிலைகள் பாலக்காடு, மலம்புழாவிலும், திருவனந்தபுரம், சங்குமுகம் என்ற இடத்திலும் உள்ளன.

18. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்

| | | |
|---|---|---|
| அ. மைசூர் | - | படகுப்போட்டி |
| ஆ. மதுரை | - | பூரத்திருவிழா |
| இ. திருச்சூர் | - | தசரா |
| ஈ. ஆலப்புழா | - | ஜல்லிக்கட்டு |

விடை

| | | |
|---|---|---|
| அ. மைசூர் | - | தசரா |
| ஆ. மதுரை | - | ஜல்லிக்கட்டு |
| இ. திருச்சூர் | - | பூரத்திருவிழா |
| ஈ. ஆலப்புழா | - | படகுப்போட்டி |

19. எந்த நேரத்திலும் செய்யக்கூடிய சில உடற்பயிற்சிகள் சிலவற்றைக் குறிப்பிடுங்கள்.

- எப்போதும் நிமிர்ந்து கம்பீரமாக நடக்க வேண்டும்.
- நாற்காலியில் அமர்ந்து இருக்கும்போது கைகளைக் கீழே தொங்கப்போட்டு நாற்காலியின் அடிப்பாகத்தைப் பிடித்து முடிந்தவரை மேலே தூக்க வேண்டும்.
- வயிற்றை வெளிப்பறமும், உட்புறமும் மாற்றி இயக்குவது அதாவது உப்புவது, எக்குவது என்பதை நேரம் கிடைக்கும்போதெல்லாம் செய்யலாம்.

## ***மூன்று மதிப்பெண்களுக்கான வினாக்கள்***

20. மோகினியாட்ட அமைப்பு முறையினை பற்றி சிறு குறிப்பு எழுதுங்கள்

**விடை**

- பெண்கள் மட்டுமே ஆடுவர்
- ஆடை அலங்காரம் எளிமையானது
- பழுப்பு நிறம் கலந்த வெண்மையான சேலை உடுத்துவர்
- அகலமான பொன்னிற சரிகை வைக்கப்பட்ட இரவிக்கை அணிவர்.
- தங்கமுலாம் பூசப்பட்ட ஒட்டியாணம், காசுமாலை, விரல்களில் மோதிரம், காதுகளில் ஜிமிக்கி ஆகிய ஆபரணங்களை அணிவர்.

21. மோகினியாட்டக்கலை வளர்ச்சியில் கல்யாணிக்குட்டியம்மாவின் பங்குக் குறித்து எழுதுங்கள்.

**விடை:**

- காலத்தின் மாறுதல்களுக்கு ஏற்ப எளிமையும்,நுட்பமும் ஏற்படுத்தியவர்.

- குடும்பப் பெண்களுக்குத் தீண்டதகாத கலையாக இருந்த மோகினியாட்டத்தைத் தன் உழைப்பால் சமூக அங்கீகாரம் பெற்றுத்தந்தவர்.
- நாட்டியக் கலைஞர்,ஆசிரியர்,ஆய்வாளர் என்னும் மூன்று நிலைகளில் பங்காற்றியவர்.
- மோகினியாட்டத்தின் முறைகளைப் பற்றி நூல்கள் படைத்துள்ளார்.

22. மார்ச்-20ம் தேதி வெள்ளிக்கிழமை உங்கள் ஊர் திருவிழாவில் இரவு 8மணியளவில் நடன ஜோதி கார்த்திகாவின் நாட்டிய நிகழ்ச்சி கோவில் மைதானத்தில் நடை பெறவுள்ளது.இதற்கான சுவரொட்டி தயாரியுங்கள்

| மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி |
|---|
| நாள் :மார்ச் 20-2021 |
| :வெள்ளிக்கிழமை |
| இடம் :மாரியம்மன் கோவில் மைதானம் |
| சங்கரன் கோவில் |
| நேரம் : இரவு 8 மணி |
| நடனக்கலைஞர் : நடனஜோதி கார்த்திகா. |
| அவர்களின் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. |
| அனைவரும் வருக ! ஆதரவு தருக. |

23. தூய தமிழ் நடையில் எழுதுங்கள்

சரியாகத்தான் கேட்டிரூக்கீங்க எனக்கு தான் எப்படிப் பதில் சொல்றதுன்னு தெரியல.சுருக்கமாக சொன்ன நான் சிற்பத்தை கத்துக் கிட்டத்துக்குக் கடவுள் மேல் ஏற்பட்ட கோபந்தான்.இப்ப நெனச்சா அதெல்லாம பைத்தியக்காரத்தனமாகத் தோனுது.

**விடை:**

சரியாகத்தான் கேட்டிருக்கிறீர்கள் எனக்குத்தான் எப்படிப் பதில் சொல்கிறது என்று தெரியவில்லை.சுருக்கமாகச் சொன்னால் நான் சிற்பத்தை கற்றதற்குக் கடவுள்மேல் ஏற்பட்ட கோபம்தான்.இப்பொழுது நினைத்தால் அது எல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது.

24. உங்கள் பள்ளி ஆண்டு விழாவில் பிரபல நாட்டிய மங்கை கார்த்திகா அவர்களில் நடன நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதனைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அறிவிப்பு தயார் செய்யுங்கள்.

<u>மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி</u>

வண்ணாமடை

19.03.2021.

பேரன்புடையீர்,

வணக்கம் வருகிற மார்ச் 21ம் தேதி 21.3.2021 வண்ணாமடை அரசு உயர்நிலை பள்ளியின் ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டுள்ளது.ஆண்டுவிழாவை முன்னிட்டு மாலை 6 மணியளவில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடை பெறயுள்ளன. அதனைத் தொடர்ந்து பரதக்கலையுல் பல்வேறு சாதனைகளைப் புரிந்து நாட்டிய பேரொளியாக வலம் வரும் பிரபல நாட்டிய மங்கை கார்த்திகா அவர்களின் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே பொது மக்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
தலைமை ஆசிரியர்,
PTA தலைவர்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
வண்ணாமடை

25.கேரளச் சுற்றுலா தலங்களையும், அவற்றின் சிறப்புகளையும் விளக்கும் ஒரு புகைப்படக் கண்காட்சி 2021 மார்ச் 20 ம் தேதி உங்கள் பகுதியில் நடைபெற உள்ளது. சுற்றுலாத்தறை அமைச்சர் துவக்கி வைக்கும் இவ்விழாவிற்கான ஒரு சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

**மாபெரும் புகைப்படக் கண்காட்சி**

இடம் - அரசு உயர்நிலைப்பள்ளி வளாகம், வண்டிப்பெரியார்

தேதி - மார்ச் 2021 - 20 ஆம் நாள், சனிக்கிழமை

துவக்கி வைப்பவர் - கேரளச்சுற்றுலாத்துறை அமைச்சர்

அனைவரும் வருக !ஆதரவு தருக

26.பின் வரும் தன் விவரப்பட்டியலை வாழ்க்கைக் குறிப்பாக மாற்றி எழுதுங்கள்.

| | |
|---|---|
| பெயர் | - மலர்க்கொடி இராஜேந்திரன் |
| பிறப்பிடம் | - சேலம் |
| கல்வி | - ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியில் உயிரியல் இளங்கலை |
| உயர்கல்வி | - மென்பொருள் தொழில்நுட்பத்தில் டிப்ளமோ, |
| பணி | - கணினி ஆசிரியர் |

**விடை**

சேலத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மலர்க்கொடி, இராஜேந்திரன், சேலம் ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரியில் உயிரியல் இளங்கலைப் பட்டம் பெற்றவர். மேலும் உயர் மென்பொருள் தொழில் நுட்பத்தில் இரண்டாண்டு டிப்ளமோ மற்றும் முதுநிலை டிப்ளமோ படிப்பை முடித்துவிட்டுப் பள்ளியில் கணினி ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

27. உங்கள் பள்ளியில் இருந்து மைசூருக்குச் சுற்றுலா செல்ல தீர்மானிக்கப்பட்டது. இதனை அனைத்து மாணவர்களுக்கும் அறிவிக்கும் பொருட்டு சுற்றறிக்கை தயாரியுங்கள்.

**சுற்றறிக்கை**

அரசு உயர்நிலைப்பள்ளி, கூவக்காடு, கொல்லம்

21-02-2021

வருகின்ற 22, 23-04-2021 வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்கள் நம் பள்ளியில் இருந்து மைசூருக்குச் சுற்றுலா செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா வருவதற்கு விருப்பமுள்ள மாணவர்கள் தங்கள் பெற்றோர் சம்மதக் கடிதத்துடன்வகுப்பு ஆசிரியரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,

தலைமை ஆசிரியர்

அரசு உயர்நிலைப்பள்ளி,

கூவக்காடு, கொல்லம்

28. எட்டுவிதமான யோகங்களைக் குறிப்பிடுங்கள்

1. இயமம் 2. நியமம்

3. ஆசனம் 4. பிரணாயாமம்

5. பிரத்தியாகாரம் 6. தாரணம்

7. தியானம் 8. சமாதி

29. உங்கள் ஊர்ப்பகுதியில் உள்ள சுற்றுலாத் தலங்களை சுத்தமாக வைக்கும் பொருட்டு ஊராட்சிமன்றம் சார்பில் நடைபெறும் கூட்டத்தில் வைத்து வாசிப்பதற்கான ஒரு உறுதிமொழி தயார் செய்யுங்கள்.

**விடை**

<u>உறுதிமொழி</u>

நமது சுற்றுலா தலங்களையும், இங்குள்ள மண்ணையும், தாவரங்களையும், விலங்கினங்களையும் பாதுகாப்பாக வைப்பது நம் அனைவரின் கடமையாகும். இந்தத் தலங்கள் சுற்றுலாப் பயணிகள் வருகையால் அசுத்தம் அடையாமல் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்தாமலும் பாதுகாப்பதில் இம்மண்ணின் மைந்தன் என்னும் முறையில் எனது பங்கினை ஆற்றுவேன் என்று உறுதிமொழி எடுக்கிறேன்.

30. யோகாவின் நன்மைகள் சிலவற்றைக் கூறுங்கள்.

- 20 நிமிட யோகா பயிற்சி செய்வதால் மூளையின் செயல் நன்கு தூண்டப்படுகிறது.
- இதயம் மற்றும் நுரையீரல் செயல்பாடு சுறுசுறுப்படைகிறது.
- இரத்த ஓட்டம் சீராகிறது.
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.
- ஆழ்ந்த தூக்கம் உண்டாகிறது.
- தெளிவான கண்பார்வைக்கு யோகாசனம் உதவுகிறது.

## நான்கு மதிப்பெண்களுக்கான வினாக்கள்

31. நாட்டிய ஜோதி கார்த்திகா அவர்கள் உங்கள் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக வருகை தரவுள்ளார்.அவரை வரவேற்று வரவேற்புரை தயாரிக்கவும்.

**விடை:**

இங்கு ஆண்டு விழாவில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் வணக்கம். இந்த ஆண்டு விழா உண்மையிலேயே சிறப்பிற்குரியது எனலாம்.ஏன் எனில் இவ்வரங்கம் மாபெரும் நாட்டிய ஜோதி கார்த்திகா அவர்களைச் சிறப்பு விருந்தினராக கொண்டதே அதற்கு காரணம்.

இவர் 10 வயது முதல் நடனம் கற்கத் தொடங்கியவர். இலங்கை திரிகோணமலை பிறப்பிடமாகக் கொண்டு புண்ணிய சீலன் அமரவதி தம்பதியினரின் தவப்புதல்வி கார்த்திகா. நடனத்தைச்சிறப்புப் பாடமாக தேர்வு செய்து முறையாக கற்று புகழ்பெற்ற கலாஷேத்திர நடனப் பள்ளியில் பட்டப்படிப்பைப் படித்தார். கடந்த 25 ஆண்டுகாலமாக நாட்டிய கலைஞராகவும் குருவாகவும் திகழ்பவர்.

இவர் 2015 ல் கனடாவில் அபிநயஷேத்ரா என்னும் நடன நுண்கலைக் கூட்டத்தைத் தொடங்கி வறுமை கோட்டிற்குக் கீழ் இருக்கும் மாணவர்களுக்கு இலவச நடனப்பயிற்சி அளிப்பவர். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கார்த்திகா அவர்களை நம் பள்ளியின் சார்பிலும் அனைவரின் சார்பிலும் வருக வருக என அன்புடன் வரவேற்கிறேன்.

32. ஸ்தபதி என்ற கதையில இடம் பெறும் நடராஜ ஸ்தபதி பாத்திரப் படைப்பை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

இந்திய ஆட்சிப்பணி அலுவலராக பணியாற்றி வரும் இறையன்பு அவர்களின் உன்னதமான சிறுகதை ஸ்தபதி. ஸ்தபதி என்னும் கதைக்கு பெயர் வைத்துள்ளமையே அக்கதையில் வரும் நடராஜ் ஸ்தபதியின் பெயரை மையமாக வைத்து அமைகிறது.

நடராஜ் ஸ்தபதி உயிரோட்டமான சிற்பக் கல்லில் உளி எழுதும் கவிதைகள் இவரின் சிற்பங்கள் ஆனால் இவரின் தோற்றம் அனைவரையும் முகம் சுருங்கவைக்கும். படைப்பாளிகள் தாங்கள் நேரடியாக பேச விரும்ப முடியாதவற்றை படைப்புகள் வழியாக தெரிவித்தார் என்பதற்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தவர் நடராஜ் ஸ்தபதி.

வண்டியில் வந்து கல் இறங்கியதும் அதை பார்க்காமலேயே அவை சிற்பத்திற்கு உதவாது என்று நுட்பத்திறன் வாய்க்கப்பட்டவர். அவரின் வார்த்தைகள் அவரைப் போலவே ஆடம்பரம் இன்றி அவசியத்திற்கு மட்டும் வாய் திறக்கும் அடக்கம் கொண்டவர்.

நடராஜ் ஸ்தபதிக்கும் கடவுள் மேல் கோபம் தன்னை அசிங்கமா படைச்சுட்டார்னு.அதனால் தான் சிற்பக்கலை கத்துக்கிட்டேன்.கடவுள் படைப்பு அசிங்கம் ஆனாலும் என்னுடைய படைப்பு ஊர் மெச்சட்டும் என்கிறார். கடவுளின் படைப்பில் அனைத்தும் அழுகுதான். நடராஜ் ஸ்தபதியின் சிற்பங்கள் அனைவராலும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.
இறையன்புவின் ஸ்தபதி கதையில் நடராஜ் ஸ்தபதி கதாபாத்திரம் வாயிலாக இறைவனின் படைப்பு நம்மை ஆளுமை உடையவனாக நாம் மாற வேண்டும் என்பதை புரிய வைத்துள்ளது.

33. முக்கடல் நடுவே அமைந்த வள்ளுவர் சிலை அமைப்பின் கலைத்திறன்களை விளக்கி உன் நண்பன் / தோழிக்குக் கடிதம் எழுதுங்கள்.

பாலக்காடு

29/05/2020

அன்பிற்குரிய நண்பன் கனேஷ்க்கு,

என் ஆருயிர் நண்பன் கண்ணன் எழுதிக்கொள்வது. நானும் என் வீட்டினரும் நலம். அதுபோல் நீயும் உன் வீட்டினரும் நலம் என நினைக்கிறேன். நீ நன்றாக படிக்கிறாயா? நான் நன்கு படிக்கிறேன். என்

தமிழ் பாடநூலில் இடம் பெற்றுள்ள கன்னியாகுமரி வள்ளுவர் சிலை அமைப்பு பற்றி படித்தேன். அதை தெரிவிக்க இக்கடிதம் எழுதுகிறேன்.

சிலை 95 அடி உயரம் கொண்டு 38 அடி உயர பீடத்தின் மீது அமைந்துள்ளது. வலக்கையில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலை முத்திரையாகப் பிடித்து இடக்கையில் திருக்குறள் ஏட்டினைத் தாங்கி கருணை பொழியும் பார்வையில் உள்ளது.

தலை மீது தூக்கி முடித்திட்ட கொண்டையைத் தலைக்கு மகுடமாய் அணிந்து இடுப்பில் பட்டாடை உடுத்தி மார்பில் மேலாடை பூண்டு காட்சி அளித்தார்.

அறத்துப்பால் 38 அதிகாரங்களால் ஆன்தால் 38 அடி உயரம் கொண்ட அறப்பீடமாகவும் கழுத்து முதல் அடி வரை 95 அடி அமைப்பில் பொருளும் இன்பமும் அதிகாரங்களை மெய்பிக்கிறது.அறப்பீடத்தைச் சுற்றிலும் 10 யானை சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது.ஒரு முனைக்கு இரு யானை வீதம் 8 யானைகளும், நுழைவாயில் இரு யானைகளும் அமைந்துள்ளது.சொல்லுருவை கல்லுருவாகக் காட்டும் சிற்பியின் சிற்பியின் திறன் பாராட்ட வேண்டும்.

எனவே உனக்கும் எனக்கும் வாய்ப்பு அமைந்தால் கன்னியாகுமாரிக்குச் சென்று திருவள்ளுவர் சிலையை நேரில் பார்த்து அகமகிழவோம். மற்றவை நேரில் அனைவரையும் கேட்டதாகச் சொல்லவும்.

இப்படிக்கு,
உன் ஆருயிர் நண்பன்,
கண்ணன்.

<u>உறைமேல் முகவரி</u>

கணேஷ் .M,
த/பெ. மதன்குமார்,
காமராசர் வீதி,
கதவு எண்.482/11.
சித்தூர்

34. கானாயி குஞ்ஞிராமன் அவர்கள் ஒரு சிற்பியாய்த் திகழ அவர் பயணித்த பாதைகளிலிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட கருத்துக்களை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.

**விடை**

ஒரு கலைஞனின் வளர்ச்சியில் பல போராட்டப் பின்னணிகள் உள்ளன என்பதை கானாயி குஞ்சிராமனின் வாழ்க்கை நமக்கு கற்றுத் தருகிறது. பல குடும்பங்களிலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்புகள் வழங்குவதில்லை. இது கானாயி குஞ்சிராமனுக்குப் பொருந்தும் இவரின் சிற்பக்கலைத் திறமைக்கு எதிராக இருந்தவர் இவரின் தந்தை. ஆனால் இவரின் தாயார் ஆதரவு இவருக்கு பெரிதும் கிடைத்தது.

இப்படிப்பட்ட சூழலில் நேருவின் ஒரு ஓவியப்படம் கட்-அவுட்டாக செருவத்தூரில் ஒரு கடைக்கு முன் வைக்கப்பட்டது. அவ்வழியே ரயிலில் நேரு அவர்கள் பயணம் செய்தபோது இந்த கட்-அவுட்டை பார்க்க நேர்ந்தது. இதனைக் கண்ட நேரு ரயிலை விட்டு இறங்கி கட்-அவுட் முன் நின்று தனது ஓவியத்தை கண்டு ரசித்து இவரின் கலைத் திறமைக்குக் கிடைத்த வெகுமதி எனலாம்.

அப்பாவின் கண்டிப்பால் ஊரைவிட்டு சென்னைக்குப் பயணம் செய்து கலை மற்றும் கைவினைப் பொருள் பயிற்சி பள்ளியில் சேர்ந்து சிற்பக்கலை நுணுக்கங்களைக் கற்று கைதேர்ந்த சிற்பக்கலைஞராக திகழ்ந்தார். கானாயி குஞ்சிராமனின் முயற்சியும், உழைப்பும் ஒருவனை வெற்றிப் பாதைக்கு அழைத்துச்செல்லும் என்பது வாழ்க்கை நமக்கு எடுத்துணர்த்துகிறது.

## ***ஐந்து மதிப்பெண்களுக்கான வினா***

35.பள்ளிக் கலைவிழாவில் நடைபெறும் கட்டுரைப் போட்டியில் சுற்றுலா வளர்ச்சியில் திருவிழாக்களின் பங்கு எனும் தலைப்பு தரப்பட்டது. கீழ்க்காணும் குறிப்புகளில் கட்டுரை எழுதுங்கள்.

**குறிப்பு**

திருவிழாக்களும், சுற்றுலாவும் - தசரா - ஜல்லிக்கட்டு - திருச்சூர் பூரம் - படகுப்போட்டி.

மனித வாழ்க்கையில் மகிழ்ச்சியுற இருப்பதற்கு சுற்றுலா தலங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இயற்கை சார்ந்த காட்சிகளைக் கண்டு களிப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.அதுபோல் சில இடங்களில் நடைபெறும் திருவிழாக்களையும் கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிகின்றனர். அதனால் சுற்றுலாத்துறைக்குப் பெரிதும் வருவாய் கிடைக்கிறது. அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தசரா**

ஒவ்வொரு ஆண்டும் செப்படம்பர், அக்டோபர் மாதங்களில் மைசூரில் நடைபெறும் தசரா விழாவினைக் காண இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இந்த விழாவின் உச்சகட்டமாக மைசூர் நகர வீதிகளில் அலங்கரிக்கப்பட்ட யானைகளின் மீது சாமுண்டீஸ்வரி தேவியின் உருவச் சிலைகள் வலம் வரும் காட்சி காண்பவரைப் பரவசப்படுத்தும்.

## ஜல்லிக்கட்டு

மதுரை முக்கியமான சுற்றுலா நகரமாகும். இங்கு நடைபெறும் திருவிழாக்கள் வரலாற்றுப் புகழ்பெற்றவை. மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர் என்ற ஊரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு விழாவைக் காணப் பல வெளிநாட்டுப் பயணிகள் வருகின்றனர். ஜனவரி 16 ஆம் தேதி நடைபெறும் இவ்விழாவில் அடங்காத காளைகளை இளைஞர்கள் அடக்குவது அனைவரையும் சிலிர்க்க வைக்கும். 17ம் தேதி ரேக்ளா வண்டிப் போட்டியும் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் ஈர்க்கிறது.

மேலும் மதுரை சித்திரை திருவிழாவிலும் பல பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் கலந்துகொள்வார்கள்.

## திருச்சூர் பூரம்

கேரளாவில் திருச்சூர் நகரில் ஏப்ரல் மாதம் மூன்றாம் வாரம் வடக்கு நாதன் கோவிலில் கொண்டாடப்படும் பூரம் திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. யானைகளின் அணிவகுப்பு, செண்டைமௌம், பஞ்சவாத்தியம், குடைமாற்றுதல் ஆகிய நிகழ்ச்சிகளைக் காண ஆண்டுதோறும் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

## படகுப்போட்டி

கேரளாவில் ஆலப்புழையில் ஓணத் திருவிழவின் போது சம்பக்குளம் என்னும் இடத்தில் நடைபெறும் படகுப்போட்டியினைக் கண்டுகளிக்க சுற்றுலாப்பயணிகள் வருகின்றனர்.

இவ்வாறு சுற்றுலாத் துறை வளர்ச்சி அடைவதற்குத் திருவிழாக்கள் பெரிதும் பங்கு ஆற்றுகின்றன.

GENERAL EDUCATION DEPARTMENT

SAMAGRA SHIKSHA, KERALA